No. 348



OFFICE OF THE CURATOR
REGISTERED
ஜூன் 1981
CHEPAUK, MADRAS-5
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
T 4512

# தேனோலை

பதிப்பாசிரியர்:
## கொடுமுடி சண்முகப் பிரகதம்



தேனோலை - 28

**1981-ஏப்ரல்**

# தேனோலை

இதழ் 28 | ரூ. 2 | ஏப்பிரல் 1981

பதிப்பாசிரியர்:

கொடுமுடி. ச. சண்முகப் பிரகதம்



## 1981ல், 1980ல் நாட்டப்பட்ட அடிக்கல்லின்மேல் கட்டுமானம் செய்வோம்

1980ல், கட்டுக்கடங்காது பெருகிய பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட்டு, நிலக்கரி, மின்சாரம், தொழில் துறைப் பொருட்கள் மற்றும் உணவுத் தானியங்களின் உற்பத்தி கணிசமாக கூடுதலாக்கப்பட்டது.

சமூகத்தின் ஏதேனுமொரு பிரிவினர், தேசீயப் பயனில் தமக்கு மிகப் பெரிய பங்கு வேண்டுமென கோரு முன்னர், நாம் கண்ட பயன்களை உறுதிப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க இது தருணம்.




கடும் உழைப்பும் சுயக் கட்டுப்பாடும் நமது கொள்கையாக வேண்டும்

davp 80/451

# சேலம் மாவட்டத்து நடுகற்கள்

காலங்கள் தோறும் தமிழக வரலாறு என்னும் காவியம் எழுதப் பட்டு வருகின்றது. எழுதப்பட்ட ஏடுகள் எல்லாம் தொகுக்கப்பட்டு, துளையிடப்பட்டு, நல்ல நூல் கொண்டு கோர்த்து வைக்கப்படு கின்றன. அவ்வப்போது பிரித்துப் படிக்கும் போது சில பல ஓலைகள் சிதிலமடைந்து விடுகின்றன. அவைகளை உடனே எழுதிச் சேர்க்க ஆள் இன்மையால் அக்காப்பியமென்னும் கட்டிலே சில ஏடுகள் காணாமல் போய்விடுகின்றன. வரலாறு தொடர்ச்சியின்றி, தலையும் புரியாமல், காலும் புரியாமல் போய் விட்டது.

காணாமல் போன ஏடுகளைத் தேடிச் சேர்க்க வேண்டியது நமது கடமையாகின்றது. நமது முன்னோர் ஆங்காங்கு கல்லிலும் செம்பிலும் எழுதி வைத்துள்ளனர். கல்வெட்டாகவும், செப்புப் பட்டயங்களாகவும் அவை கண்ட கண்ட இடங்களில் சிதறிக் கிடக் கின்றன. அவற்றைத் தேடி, தொகுத்து தமிழக வரலாறு என்னும் காவியத்தைச் செப்பம் செய்வோம்.

## பெரிய சக்கிலிச்சி ஏரிக் கல்வெட்டு*

டேனிஷ்பேட்டையிலிருந்து இராமமூர்த்தி நகர் செல்லும் வழியில் கேத்தநாய்க்கன்புதூர் என்னும் இடத்தில் பெரிய சக்கிலிச்சி ஏரி என்ற பெயரில் ஒரு ஏரி உள்ளது. அதன் கரையில் ஒரு மதகின் அருகில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை ஏரியின் உட் பக்கமாக உள்ளன. ஏரியில் நீர் வருங்கால் நீரில் மூழ்கிவிடும். கரையைப் பலப்படுத்த மண் இட்டால் அந்த மண்ணுக்குள் மறைந்து விடும். தலைப்பகுதி அரைவட்ட வடிவில் அமைந்துள்ள செவ்வகப் பலகைக்கல், அவற்றை அந்த ஊர்ச் சேரி மக்கள் பெரிய சம்பம்மா, சின்னச் சம்பம்மா என்ற இரு பெண் தெய்வங்களாகப் பாவித்து வணங்கி வருகின்றனர். நீர் வற்றிய காலங்களில் மண்ணைத் தோண்டி கற்கள் வெளியே தெரியுமாறு செய்து வணங்குவது அவர்கள் வழக்கம்.

அவ்விரண்டு கற்களிலும் எழுத்துக்கள் உள்ளன. கி. பி. எட் டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்தில் அவை அமைந் துள்ளன. தமிழ் எழுத்து வடிவின் ஒரு வகைக்கு வட்டெழுத்து என்று பெயர். அதிசயிக்கத் தக்க வகையில் இரண்டு கல்வெட்டின் வாசகமும் ஒன்றாகவே அமைந்துள்ளன. அதன் வாசகம் வருமாறு:

ஸ்ரீ கிடங்கல் புலியார் ம
க னல்லி ஒட்டை கண்டது

எழுத்துக்கள் மிக அழகாகவும், தெளிவாகவும் உள்ளன. எளிய சிவப்பு வண்ணத்தில் கற்கள் அமைந்துள்ளன. தாரமங்கம் கோயில் சிற்பங்கள் செய்யப் பயன்பட்ட வகையைச் சேர்ந்தன.

இந்தக் கல்வெட்டு வாசகத்திலிருந்து சில அரிய உண்மைகள் புலப்படுகின்றன. அந்த ஏரியின் பழைய பெயர் ''ஸ்ரீ கிடங்கல்'' என்பதாகும். கிடங்கல் என்பது நீர்நிலையைக் குறிக்கும். அதில் ''நல்லி'' என்பவன் ஒரு மதகு வைத்துள்ளான். மதகை ஓட்டை எனக் குறிப்பிட்டுள்ளார்கள். நல்லியின் தகப்பனார் பெயர் புலியார். இன்றுவரை அதனைச் சக்கிலியார் தமது தெய்வமாக வணங்கி வருவதால் இப்பெருமகன் அந்தக் குலத்தைச் சேர்ந்தவ ராக இருக்கலாம். குலத்தில் ஏற்றத் தாழ்வு பெருகும் காலத்திற்கு முன்னால் நடந்த செய்தியாகக் கொண்டால் இதன் பொருத்தம் நன்கு விளங்கும்.

மதகு வைத்த செய்தி எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததால் ஏரி அதற்கு முந்திய காலத்தது என்பதும் தெரிவாகும். கொங்கு நாட்டில் வட்டெழுத்துக் கல்வெட்டு மிக அருகியே காணப்படுவ தால் இதன் சிறப்பு விளங்கும். வேளாண்மைக்கான ஏரிக்கு ''ஸ்ரீ கிடங்கல்'' என அடைமொழியிட்டு அழைத்தல் நமது முன்னோரின் பண்பாட்டைப் புலப்படுத்தும்.

### மருதூர்க் கல்வெட்டு

சங்ககிரி வட்டத்தில் ஒரு புதிய ஏரியினைப் பொதுப்பணித் துறை அமைத்து வருகின்றது. அந்த ஏரி அமைந்துள்ள ஓடை, மதுரகாளியம்மன் ஓடை என்று தற்போது வழங்கப்படுகின்றது. அந்த அணையின் மேல் கரையில் மதுரகாளியம்மன் கோயில் மிகச் சிறியதாக இருந்தாலும் பழைமைச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அதன் அருகில் ஒரு கிணறும் கிணற்று வாரியில் சில வாழை மரங்களும் உள்ளன. அந்த வாரிக்கரையில் ஒரு கல்வெட்டு அமைந்துள்ளது. சாதாரணமான செவ்வக வடிவக்கல். அதன் முன் பக்கமும் வலது பக்கமும் உள்ள வாசகம் வருமாறு.

**முகப்பு**

சிற்றூ ர் குளக்குறி
ச்சி படலோடு குறி
ச்சி அஞ் ஞூற்று ம
ங்கல மழபாடி
வடகரை நாட்டில்
இருப்பலி தெண்
ணிலி இந்த ஊர்க
ளில் காணி உடை
ய வெங்கச்சி வே
ட்டுவரில் காடு வெ
வட்டி திருவாள
ப் பிள்ளைக் காணி

**வலது பக்கம்**

மருதூ
ரில் எ
ழுருந்த
ருள ப
ண்ணி
ன் நார்

மதுரகாளியம்மன் என்று அந்தக் கோயிலின் பெயராக வழங்கி வரு கின்றோம். ஆனால் இந்தக் கல்வெட்டிலிருந்து அது பிழை என்று தெரிகின்றது. இந்த இடத்திற்குப் பெயர் மருதூர். காளியம்மன் என்பதே காலப்போக்கில் மதுர காளியம்மன் என்று வழங்கி வரு வதை அறியலாம். இருப்பலி என்பது அங்கிருந்து வெகு பக்கத்தில் உள்ள ஊர். எனவே அந்தப் பகுதி வடகரை நாடு என வழங்கி வந்துள்ளமை அறியலாம்.

காடுவெட்டி என்பது பல்லவர்களின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. எனினும் இங்கு அதைக் கொண்டு மயங்கவேண்டிய தில்லை. கொங்கு நாட்டின் பூர்வ குடிகளான வேட்டுவருக்கும் இப்பெயர் உண்டு. வேட்டுவர் பிள்ளை என்ற பின்னொட்டு கொண்டுள்ளதை அறியலாம். திருவாளப் பிள்ளை அவர்களின் காணி (உரிமை) ஊர்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் நொய்யலாங்கரையில் அஞ்சூருக்கு அருகில் உள்ளது. மழபாடியும் திருச்சி மாவட்டத்தில் உள்ளது.

கல்வெட்டில் காலம் குறிக்கப்படவில்லை. எழுத்தமைதி கொண்டு இதனைப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வைக்கலாம். மதுரகாளியம்மன் கோயில் அவ்வளவு பழமையுடையதென்றறிய லாம்.

**திருச்செங்கோடு மலையின் தரைச் சந்தி**

திருச்செங்கோடு மலை நாகம் ஒன்று படுத்திருப்பது போல அமைந்துள்ளது. அதனை நாககிரி என்று அழைப்பர். மலையின் மேல் அர்த்தநாரீசுவரரும், செங்கோட்டு வேலவரும் குடிகொண் டுள்ளனர். அந்த மலையின் வால் போன்ற பகுதியின் அடிப்பகுதி மகாதேவ வித்யாலயத்தின் அருகில் தரையோடு வந்து மூட்டு கின்றது. அந்த இடத்தில் சுமார் 500 ஆண்டுகட்கு முந்திய கல் வெட்டு ஒன்று உள்ளது. அதன் வாசகம் வருமாறு:

சோபகிரிது வருஷம்
ஆனி மாதம்
அற்த நாரீசுர
(ப)ண்டி தற்கு
தரை சந்திகை மா
——யம்

எழுத்துக்களுக்கு மேல் ஒரு சிவலிங்கம் வெட்டப்பட்டுள்ளது. மலையின் தொடர்ச்சி தரையைச் சந்திக்கும் இடம் பூசை செய்யப் பட்டுள்ளது. அதாவது மலையையே தெய்வமாக மக்கள் வழங்கி

வந்தது தெரிகின்றது. திருச்செங்கோடு மலை "தெய்வ மாமலை" என்று இலக்கியங்கள் கூறுவது நடைமுறையில் இருந்ததை இதனால் அறியலாம்.

இந்தக் கல்வெட்டு விரைவில் ஆக்கிரமிப்புகளால் அழியும் நிலையில் உள்ளதென்பதை மிக வருத்தத்தோடு உணரவேண்டியுள்ளது.

## இன்னும் சில கல்வெட்டுக்கள்

இன்னும் படித்துப் பார்த்து மக்களுக்கு அறிவிக்க வேண்டிய புதிய கல்வெட்டுகள் சிலவற்றின் தகவல் தருவதும் இன்றியமையாததாகும்.

1. மதியம்பட்டி அணையில் கீழ்கரையில் சுமார் 300 ஆண்டுகட்கு முந்திய கல்வெட்டு தனிக்கல்லாகக் கிடக்கின்றது.

2. மதியம்பட்டியிலிருந்து பொரசல்பட்டி செல்லும் சாலையில் மதியம்பட்டி ஏரியின் அருகில் பிரியும் இட்டேரியில் ஒரு கல்வெட்டு. எல்லைக்கல் போன்று உள்ளது. நன்கொடைச் சாசனம்.

3. மதியம்பட்டி அணை செல்லும் வழியில் மணியகாரர் தோட்டத்தில் தெலுங்கு எழுத்துக்களுடன் ஒரு கல்வெட்டு கிடக்கின்றது.

4: கேத்தநாய்க்கன் புதூர் பெரிய சக்கிலிச்சி ஏரியின் கலுங்கலுக்கு அருகில் கன்னட எழுத்துக்களுடன் ஒரு நடுகல் உள்ளது.

## சில நடுகற்கள்

போரில் வீரங்காட்டி மடிந்தவர்க்கு கல் நட்டு தெய்வமாக வணங்குவது நம்நாட்டு வழக்கம். சங்க காலத்திலிருந்து இந்த வழக்கம் உள்ளது. கல்லில் வீரனின் உருவமும் அவன் சிறப்பும் எழுதப்பட்டிருக்கும். எழுத்து இல்லாமலும் சில நடுகற்கள் இருக்கலாம். அத்தகைய அருமை வாய்ந்த நடுகற்கள் பல சேலம் மாவட்டத்தில் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன. அவற்றில் சில வருமாறு:

1. ஆட்டையாம்பட்டியிலிருந்து சேலம் செல்லும் வழியில் ஊரின் எல்லையில் சாலையின் வலதுப்பக்கக் காட்டில் ஒரு நடுகல் உள்ளது. இரண்டு பக்கக் கல்லும் மேற்கூரைக் கல்லும் உள்ளது. பின் கல்லில் இரண்டு வீரர்களின் உருவங்கள் உள்ளன. ஒரு வீரன் குதிரைமீது அமர்ந்தபடி கையில் ஈட்டி வைத்துள்ளான். குதிரை

தாண்டும் கோலத்தில் உள்ளது. எதிரே உள்ள வீரனின் கையில் நீளக் குழல் துப்பாக்கி உள்ளது. இது போன்ற நடுகல் இதுவரை தமிழ்நாட்டில் வேறு எங்கும் கண்டுபிடிக்கப்படவில்லை.

2. கே. மோரூர் சாலையில் பெருமாள் கோவிலுக்கு முன்னர் ஒரு நடுகல் உள்ளது. இரண்டு பக்கக் கல்லும் மேற்கூரைக் கல்லும் உள்ளது. பின் கல்லில் ஒரு ஆடவனும் அவனருகில் இரண்டு பெண்களின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. மூன் றும் வணங்கும் வடிவில் கைகளைக் கூப்பியவாறு அமைந்துள்ளன.

3. பழைய சூரமங்கலத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் சாலையின் ஒரு ஓரத்தில் ஒரு நடுகல் உள்ளது. அதற்குச் செங்கல் கட்டிடமும் சிறிய வளைவுக் கூரையும் உள்ளன. ஒரு வீரன், ஒரு பெண், ஒரு பசுமாடு அதன் கன்று ஆகிய உருவங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

4. சங்ககிரியில் திருச்செங்கோட்டுச் சாலைகில் தாலூகா அலுவலகத்தின் அருகில் சாலையில் ஒரு நடுகல் உள்ளது. மக்கள் தினசரி மஞ்சள் பூசி மாலையிட்டு வணங்குகின்றனர். ஒரு ஆடவ னின் உருவமும் ஒரு பெண்ணின் உருவமும் வணங்கிய நிலையில் உள்ளன. தனிக் கல். கூரையில்லை எழுத்து உள்ளதா, இல்லையா என்று தெரியவில்லை.

தமிழ் நாட்டில் வரலாறு ஒழுங்காக எழுதப்படவில்லை என் பதை ஒரு குறையாகக் கூறுவர். ஆனால் தமிழர்களைப் போன்று எல்லாச் செய்திகளையும் அவ்வப்போது எழுதி வைத்தவர்கள் கிடையாது. சங்க காலந்தொட்டு சங்கிலித் தொடர்போல எல்லாக் காலத்திலும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றைத் தேடித் தொகுத்து செப்பம் செய்ய வேண்டியது இற்றைநாள் மக்கள் கடமையாகும்.

..................................

கொங்கு 4/1977

* பத்திரிக்காதர்மம்

கேத்தநாய்க்கன் புதூர் ஏரிக் கல்வெட்டு, கொங்குநாட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும். தமிழகத்து மக்கள் மற்றும் உலக அறிஞர்கள் அறிதல் வேண்டும் என்ற ஆர்வம் கருதி, இச்செய்தியை 'இந்து' நாளிதழுக்கு அனுப்பப்பட்டது. நெடுந்தொலை வில் இருந்த போதிலும், பணியின் இடையே, பசி பாராது கடும் வெய்யிலில், மண்ணைத் தோண்டி, கல்லைக் கருவி, எளிய கருவி கள், வசதிகள் கொண்டு காகிதத்தில் மசிப்படி (estampage) எடுக்கப்பட்டது.

வட்டெழுத்தில் பயிற்சி குறைவாக இருந்த போதிலும், தொல்லியல் புலவர்களின் துணையோடு படித்து வாசகத்தைச் செப்பம் செய்து கொள்ளப்பட்டது. பின்னர் மசிப்படி, வாசகம், கல்லுள்ள இடம் மற்ற எல்லாக் குறிப்புகளுடன் விவரமாக எழுதி இந்துப் பத்திரிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்து.

தினசரி இந்து நாளிதழில் தேடியதுதான் மிச்சம். ஒரு நாள். அதே செய்தி இந்துவில் புகைப்படத்துடன் வெளியானது (புகைப்படம் நாம் அனுப்பவில்லை) அடியில் From our corespondant என்று இருந்தது.

ஒரே அதிர்ச்சி. உலகப்புகழ் பெற்ற நாளிதழிலா இந்த எத்து வேலை? இதனை ஆராய்ந்ததில் கிடைத்த உண்மை இதுதான்.

அந்தச்செய்தியில் சேலம். அருங்காட்சியகத்தின் பெயர், ஒரு சிறிய கன்னடக் கல்வெட்டின் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது அவரை அணுகி விசாரித்தோம். ஒருநாள் இந்துவின் சேலம் நிருபர் அவரை அனுகி, விவரம்முழுக்கக் கூறாமல் தன்னுடன் வருமாறு, இந்த ஏரிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். ஏரியின் முன்னாலிருந்த கன்னக் கல்வெட்டுக் கொண்ட சிறிய நடுக்கல்லைப் பார்த்து விவ்ரம் கேட்டுக் கொண்டார். (அதன் வாசகம் இன்னும் படிக்கவில்லை) பின்னர் ஏரிக்கரையில் நாங்கள் ஏற்கனவே கரையைத் தோண்டிக் காண வசதியாக வைத்திந்தபடியால், புகைப்படம் எடுத்துக் கொண்டாராம். பிறகு திரும்பிவிட்டார்கள். பின்னர் இந்துவில் செய்தி வந்தது. அவருக்கும் இந்த ஏரியில் கல்வெட்டு இருத்த செய்தி இந்த நிருபருக்கு எப்படித் தெரிந்ததென்பது நெடுநாள் புதிராகவே இருந்தது. நாங்கள் கலந்துரையாடிய பின்னரே உண்மையை அறிந்து கொண்டார்,

ஒரு துப்பறியும் கதையின் மர்மம் துலக்கிய திருப்தி மிஞ்சியது. எங்கள் பெயர் வரவில்லையாயினும், எங்கள் செய்தி, அதே ஆங்கிலச் சொல் பிரயோகங்களுடன் இருந்ததில் மகிழ்ச்சியே.

இந்துவில் வெளிவருமுன்னரே கொங்கு இதழில் வந்து விட்டது. தினமணிச் சுடரிலும் "கல் வெட்டுக் கடவுள்" என்ற பெயரில் (எங்கள் பெயர் இல்லாமல்தான்) வந்துவிட்டது.

நமது "தர்மநெறி தவறாத" தமிழ் நாட்டுப் பத்திரிக்கையாளர்களிடம் இந்த நாட்டு இளைஞர்கள் விழிப்போடு இருக்க வேண்டுமென்பதற்காகவே இதனைக் குறிப்பிட்டோம். பொருத்தருளுக.

# மாமல்லை

மாமல்லையைப் பற்றி அறிமுகப் படுத்தும் நூல்களுள் தலையாபது "மாமல்லை" என்ற நூல். மாமல்லையில் ஐந்து ரதங்களை குன்றன்ன கோயில்கள் என்று அதன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவற்றின் நடுவில் நிற்போர் "இங்கே முதலிடம் எதற்கு? கலைக்கா? கற்பனைக்கா?" என வினவுவர் என்கிறார் அதன் ஆசிரியர் திரு. நாகசாமி அவர்கள்.

கலை, கற்பனை இவற்றை விட உயர்ந்த காரணம் ஒன்று தெரிகிறது. அதுதான் "அறிவு" தனக்கு முற்பட்டு இருந்த கட்டிட அறிவை பின் வருவோர் கண்டு பயனடையும் வகையில் சிறிய அளவில் செய்த மாதிரி அமைப்புகளே அவை (Prototype Models) சிற்பிகள் சுவடி கொண்டு பல நாள் விளக்க வேண்டிய துன்பத்தைக் குறைக்கும் மாதிரி நகரம். பொறியியல் கணக்கீடுகளையும் சூத்திரங்களையும் விளக்குவதற்கான காட்சிக் கூடம். வருங்கால மக்கள் அறியும் வண்ணம் அமைக்கப்பட "டிஸ்னிலேண்டு". வால்ட் டிஸ்னிக்கு வழிகாட்டியே இராமசிம்மப் பல்லவன் தான்,

தொல்லியலர்கள் தமிழ் நாட்டுக் கட்டிடக்கலைப் பாடத்தைத் தொடங்குவதே மாமல்லையிலிருந்து தான். அதற்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடங்கள் எதுவும் கிடைக்காததே இதற்குக் காரணம்.

மகேந்திரமர்மன் (கி. பி. 609-630) தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டில், 'மகேசுவரனுக்கும், பிரமதேவனுக்கும், விஷ்ணுமூர்த்திக்கும், மரம், கல், சுண்ணாம்பு முதலியன இல்லாது மகேந்திர வர்மன் கோயில் ஒன்றை அமைத்தான்!' என்று கூறுகிறான்.

இதனுல் பல்லவர்களுக்கு முன்னர் தமிழகத்தில கட்டிடக் கலை சிறந்து விளங்கியது என்றும் அதில் பயன்படுத்திய பொருள் கல், செங்கல், சுண்ணாம்பு மரம் ஆகியவை என்றும் அறிகிறோம், கல்லாலான குகைக் கோயிலை மகேந்திரவர்மனுக்கு முன்னாலேயே பாண்டியர்கள் வெட்டி வைத்திருந்தனர் என்பதை ஆனைமலைக் குகைத்தளியிலிருந்து அறியலாம்,

இந்தக் குகைத்தளிகள் ஏற்கனவே இருந்த கட்டிடத்தின் மாதிரிகள் என்று ஏன் சொல்கிறோம்? குகைத்தளியின் அமைப்பைப்

பார்த்தாலே இதன் காரணம் புலனாகும். குகைத்தளிகள் அமைக்கும் பாறைகள் பெரும்பாலும் கிரானைட் (graiut) வகையைச் சேர்ந்தவை. பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு உருகி ஓடிய பாறைக் குழம்பு குளிர்ந்து கருங்கல்லாக மாறியவை. அதன் துகள்களில் ஒன்று வெட்டப்படுவதால் மற்றதன் மேல் விசை ஏதும் ஏற்படாது. ஒரு பகுதியில் குடைந்தாலும் மேல் பரப்பு விழுந்து விடாது. அதனால் குகைத்தளிகளுக்கு, தூண்களும் உத்திரங்களும் தேவையில்லை, ஆனால் கிட்டத்தட்ட எல்லாக் குகைத்தளிகளின் உள்ளமைப்பும், தூண், உத்திரம் முதலியவற்றோடு சாதாரணச் செங்கல் கருங்கல் கட்டிடங்களையே ஒத்திருக்கின்றன. சிற்பிகள் இதுநாள் வரை தூண், உத்திரம் இல்லாத ஒரு கட்டிடத்தை எண்ணிக் கூடப் பார்த்ததில்லை. பிற கட்டிடங்கள் எப்படியிருந்தனவோ அதே வகையில் 'நமக்கேன் வம்பு' என்ற வகையில் உட்புறத்தையும் அமைத்து விட்டனர்.

வெறும் கலைக்காகவோ, கற்பனைக்காகவோ என்றால் வெளித்தோற்றத்தில் எல்லாக் கைவண்ணத்தையும் காட்டிவிட்டு, உள்ளே மொட்டையாக விட்டிருப்பார்கள்.

கருங்கல் எவ்வளவு அமுக்கம் (Compressiou) தாங்கும் என்பது தற்காலக் கருவிகளால் தெளிவாக உணர முடிகிறது. அதே வேளையில் எவ்வளவு இழுப்பம் (Tension) எடுக்கும் என்ற சோதனைகளில் சீரான தகவல்கள் கிடைக்கவில்லை. ஒரே கல்லின் இருவேறு துண்டுகள் இருவேறு மதிப்புகளைத் தரும். இந்த ஒரே காரணத்தால்தான் கருங்கல்லின் பயன் தற்காலப் பொறியியலில் அருகி உள்ளது. அமுக்கம் மட்டும் வரும் இடங்களில் கருங்கல் தாராளமாகப் பயன்பட்டு வருகிறது. இழுப்பம் வரும் இடங்களிலெல்லாம் லாம் கல்லைவிட மரம் அதிகமாக முன்பு பயன்பட்டு வந்தது. இந்த இடத்தைத் தற்போது உறுதிசெய்த கற்காரை பிடித்துக் கொண்டது.

மாமல்லை ஐந்தளிகளில் ஐந்தும், தனித்தனிக் கட்டிட அமைப்புகளைக் காட்டுவது அதன் சிறப்பாகும். தர்மராஜ ரதம் என்ற முதல் கட்டிடம் தமிழகத்தின் பழைய முகில் மாடங்களின் மாதிரியாகும்.

குறியவு நெடியவுங் குன்று கண்டன்ன
சுடுமண்ணோங்கிய நெடுநிலைக் கோட்டம்

—மணிமேகலை

மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழி

—சிலப்பதிகாரம்

நெடுநிலை மாடங்களைபற்றிச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் கூறப்படுகிறது. தர்மராஜ ரதம் மூன்று மாடங்களைக் கொண்டதாக உள்ளது.

வகைபெற எழுந்து வானம் மூழ்கி
இல் காற் றிசைக்கும் பல் புழை நல்லில்

(மதுரைக்காஞ்சி 357—8)

என்ற இலக்கணத்திற்கேற்ப சாளரங்கள் வைத்து வசதியாக அமைந்துள்ளது. அர்ஜுன ரதமும் முகில் மாடங்களின் அமைப்பிலேயே அமைந்ததாகும்.

பீமரதம் சாலைவடிவில் அமைந்துள்ளது. மாமல்லையின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்: "இதன் இருபக்கங்களிலும் மரச்சட்டங்களை உபயோகித்து வேயப்படும் கூறையின் அமைப்பு அலங்காரமாகச் செதுக்கப்பட்டுள்ளது." அலங்காரத்திற்கு மட்டுமல்லாமல், பிறர் அறிவதற்காகவும் வெட்டப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.

தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை

(பெரும்பாணா 263-5)

புதுவை வேய்ந்த கவி குடில்

(பெரும்பாணா 225)

ஈந்தலை வேந்த வெய்ப்புரக் குரம்மை

(பெரும்பாணா 88)

இன்று இச்சாலை அமைப்பை தமிழ் நாட்டில் எல்லாச் சிற்றூர்களிலும் காணலாம்.

திரௌபதி ரதம் இதே அமைப்பைக் கொண்டதாயினும் சதுர வடிவமானது. பீமரதத்தில் இருபுரம் சரிவாகவும் மீதி இருபுரம் செங்குத்தாகவும் உள்ளன. திரௌபதி ரதம் நாற்புரமும் சரிவாக உள்ளது. கூரைக்கட்டிடங்களுக்குப் பின்னர் வந்த ஓட்டுவில்லை வீடுகளிலும் இவ்வமைப்புகளைக் காணலாம்.

முக்கியமான கட்டிட அமைப்பு சகாதேவரதம். அதன் முகட்டை 'தூங்கானை மாடம்' என இலக்கியங்கள் கூறுகின்றன. பொறியியலில் "குவிமாடம்" (Dome) என்பர். செங்கல் கட்டிடத்திற்கு வசதியானதாகும். இன்றும் கோயில்களில் கருவறைக்கு மேல் இத்தகைய மாடங்கள் இருப்பதைக் காணலாம்.

யானையின் பின்புறம் போலத் தோற்றம் தருவதால் அதைத் தூங்கானை மாடம் என்றனர்.

புதுப் பிறை அன்ன சுதைசெய் மாடத்து
(புறம் 378)

மண்டபங்கள் பிறை போல வடிவமுடைய மாடங்கள் கொண்டிருந்தன, என அறிகிறோம். அவை சுண்ணாம்புச் சுதையால் ஆனவை.

மாமல்லையில் ஐந்தளிகள் அமைந்துள்ள வகை பெருநகரின் அகன்ற தெருப்போல ஒரே வரிசையில் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. 'வினைபுனை நல்லில்' பல கொண்ட, வியநகரரக, அமைந்துள்ளது கண்டு மகிழத்தக்கது.

இராஜசிம்மப் பல்லவன் ஐந்தளிகளை மட்டுமல்லாது மாமல்லை முழுவதையும் அமைத்ததில் கலை, கற்பனை இவற்றைவிட பொறியியற் கருத்தே முந்தியிருப்பதை யூகிக்கலாம். தனக்கு முன்னிருந்த கட்டிட அமைப்புகளை ஒரே இடத்தில் காணும் வண்ணம் அமைத்த பெருநோக்கம் புலனாகிறது. தமிழகத்துக் கட்டிடக் கலையின் வளர்ச்சியை ஆராயப் புகுவோர், ஐந்தளிகளுக்கு மூலக் கருவாக உள்ள சங்க இலக்கியக் கட்டிடக் கலைக் குறிப்புகளைத் தொட்டுத் தொடங்க வேண்டிய நிலைமை கண்கூடு. 'டிஸ்னிலேண்டு'க்கு முன்னோடியாக அமைந்த மாமல்லை, தமிழகத்தின் அறிவு சார்ந்த கலைக் கண்ணோட்டத்தின் விளைவேயாம்.

---

23-5-1971 அன்று தமிழகத் தொல்லியல் துறை நடத்திய "பல்லவர்காலக் கலை" கருத்தரங்கில் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் தலைமையில் ஆராயப்பட்ட எழுத்துரை.

# புகார்த் தூம்பு

பதியெழு வறியாப் பழங்குடி நிறைந்த புகார், இந்திர விழா மறந்ததால், கடல் பொங்கி அழிந்து விட்டதாக மணிமேகலை கூறு கிறது. அது உண்மையாகத் தெரியவில்லை. அன்றைய பெருநகர் பூம்புகார் இன்று பல சிற்றூர்களாகக் காட்சி அளிக்கின்றது. அங்கு நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் வரலாற்றை மெய்ப்பிக்கும் சான்றுகள் பல கிடைத்துள்ளன. அவற்றில் தலையாயது செங் கல்லால் கட்டப்பட்ட தூம்பு ஆகும்.

நடுவரசின் தொல்லியல் துறை அகழ்வுகளை மேற்கொண்டுள் ளது. செங்கல் கட்டிடத்தின் அமைப்பு நீர்நிலையியல் (Hydrostatics) விதிகளுக்கேற்ப வளைவாக அமைந்துள்ளது. நமது முன்னோரின் நீரியல் புலமையை இது புலப்படுத்தும்.

தொல்லியலர்களின் மதிப்பீட்டின்படி அது சுமார் 8 மீட்டர் வட்டமான குளமும் அதற்குள் நீர் வருவதற்கான வழியும் ஆகும். நீர் வழியின் அகலம் 84 சென்டி மீட்டர் என அளந்து கண்டுள்ள னர்.

அது வட்டக் குளமாக இருக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. இரு பக்கமும் நீண்ட மண் கரையின் நடுவில் அமைந்த தலைப்புப் பகுதி (head works) ஆக இலக்கலாம்.

நிச்சயமாக அது நீர் உள்ளே நுழையும் வழி அல்ல. நீர் வெளி யேறும் தூம்பு ஆகும். வெளியேறும் நீர், முழு அளவில் செல்வ தற்காக அமைக்க வேண்டிய வளைவுகளுடன் அமைந்திருப்பதே சான்றாம். நீரியலில், துளைவழி நீர்ப்போக்கு (flow through notehes) அறிந்தோர்க்கு அது எளிதில் புலனாகும்.

தூம்பின் அகலம் 84 சென்டி மீட்டர் என்பது குறிப்பிடத்தக் கது. அக்காலத் தமிழர்கள் பயன்படுத்திய கோல் என்ற அளவு கோலின் நீளம் 84 சென்டி மீட்டர் என்பதை அறிந்தால், இலக்கியத் திற்கும் நடை முறைக்கும் உள்ள ஒற்றுமை புரியும்.

மாதவியின் அரங்கேற்றம் நடைபெற்ற மேடையின் அளவுகளை எடுத்துரைக்கும்போது, இளங்கோ அடிகள் இக்கோலின் விவரத்தையும் தருகின்றார்.

அதுவோ நிலத்தை அளந்து வீடுகளை வகுக்கும் (design) பொறியாளர்கள் பயன்படுத்துவது. பெருமலைகளில் உயரமாக வளர்ந்த மூங்கிலைத் தேர்ந்தெடுத்து, அதில் கணுவுக்குக் கணு ஒரு சாண் நீளம் உள்ள பகுதியில் நான்கு சாண் நீளம் வெட்டிக் கொள்வர். அதன் மொத்த நீளம் 24 விரற்கடை ஆகும். அதுவே அளக்கை நூல்களின் நெறிப்பட அமைந்ததாம். ஒரு விரற்கடை என்பது 1-3/8 அங்குலம். 8 விரற்கடை கொண்டது ஒரு சாண் (8-1/4''). 4 சாண் கொண்டது ஒரு கோல். (33'') இது 84 சென்டி மீட்டருக்குச் சமம். தஞ்சைப் பெருவுடையார் கோயில் இந்தக் கோல் அளவுகளிலேயே அமைந்துள்ளது. மாமல்லைக் குடைவரைகளும் இதே அளவால் அமைந்ததாகும்.

இளங்கோ அடிகள் தரும் கோல் அளவில், அக்காலக் கட்டிட அளவுகளுடன் பொருந்தியிருப்பது பெருவியப்பளிக்கக் கூடிய உண்மை ஆகும். இலக்கியத்தின் மெய்ப்பாடு தெள்ளென விளங்கும்.

---

கொங்கு 4/1973

# மாதவி ஆடிய மேடை

ஆடலரசி மாதவியின் அரங்கேற்றத்தை கூறும் இளங்கோ அடிகள் அந்த மேடையை அமைத்த பொறியாளர்களுக்கு பாராட்டுத் தெரிவித்து விட்டு அதன் அளவுகளையும் அழகுகளையும் எடுத்துரைக்கிறார். அளக்கும் கோலின் தன்மையையும் காட்டுகின்றார். அந்தக்கோல் மூங்கிலால் ஆனது; கணுவுக்குக் கணுவு உள்ள தூரம் ஒரு சாண்; இருபத்தி நான்கு விரற்கடை நீளமுள்ளது. (ஒரு விரற்கடை 1 3/8 அங்குலம்; ஒரு கோல் 33'')

மேடையின் நீளம் எட்டுக்கோல் (22' - 0'') அகலம் ஏழுகோல் 19' - 3''), மேடையின் உயரம் ஒரு கோல் (2' - 9'') மேடைக்கும், உத்தரப் பலகை (CeillngSlab) க்கும் இடை உயரம் நான்கு கோல் (11' - 0''), மேடைக்கு இரண்டு பக்கமும் வாயிற்படிகள் இருந்தன. மேடையைச் சுற்றிலும் பூத கணங்களின் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

நான்கு தூண்களிலும் ஒளி விளக்குகள் பொருத்தப் பட்டு மேடையில் ஆடுவோர் நிழல் கீழே விழாதவாறு ஒளியமைப்பு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு ஓவியத் திரைகள் விரிக்கவும் சுருக்கவும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தன! விதானம் (ceiling) பல வகை வண்ணச் சித்திரங்ளைப் பெற்று அரிய வேலைப் பாட்டுகளுடன் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

இதை இளங்கோவே விளக்கக் கேட்போம்.

### அரங்கின் இலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| எண்ணிய | நூலோர் | இயல்பினின் | வழாஅது |
| மண்ணகம் | ஒருவழி | வகுத்தனர் | கொண்டு |
| புண்ணிய | நெடுவரைப் | போகிய | நெடுங்கழைக் |
| கண்ணிடை | ஒருசாண் | வளர்ந்தது | கொண்டு |
| நூனெறி | மரபின் | அரங்கம் | அளக்கும் |
| கோல் அளவு | இருபத்து | நால்விரல் | ஆக |
| எழுகோல் | அகலத் | தெண்கோல் | நீளத்து |

ஒருகோல் உயரத்து உறுப்பின் தாகி
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோல் ஆக
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்தப்
பூதரை எழுதி மேனிலை வைத்துத்
தூண்நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்.

(சிலம்பு–அரங்கேற்று கதை 95-113)

# முறை தெரியாக் கதை

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. விக்கிரமாதித்தன் முருங்கை மரத்தில் ஏறி, வேதாளத்தைக் கட்டித் தூக்கிக்கொண்டு வந்தான்.

வேதாளம் கதைசொல்லத் தொடங்கியது. ஒரு ஊரில், தந்தையும் மகனுமாக இரண்டுபேர் நடந்து போய்க்கொண்டிருந்தனர். அந்த வழியில் இவர்களுக்கு முன்னால் இரண்டுபேர் நடந்துபோன காலடித் தடங்கள் தெரிந்தன. அவை பெண்களின் காலடிகள் போலத் தெரிந்தன, ஓரிணை சற்றே சிறியதாகவும், அடுத்த இணை பெரியதாகவும் இருந்தன.

அவற்றைக் கண்ட தந்தையும், மகனும் ஒரு முடிவுக்கு வந்தனர். பெரிய காலடி உள்ள பெண்ணைத் தந்தையும், சிறிய காலடி உள்ள பெண்ணை மகனும் மணந்து கொள்வதாக ஏற்பாடு செய்து கொண்டனர். அதனால் வேகமாக நடந்து சென்றனர்.

விரைவில் முன்னால் சென்றவர்களைக் கண்டுபிடித்து விட்டனர். எதிர்பார்த்ததுபோலவே அவர்களும் பெண்கள்தான். அதில் ஒருத்தி தாய்; மற்றவள் மகள். அவர்களும் ஆண்களின் துணையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள முன்வந்தனர்.

ஆண்களின் தீர்மானத்தைக் கேட்டு மகிழ்ந்தனர். ஆனால் ஓரே ஒரு தவறு நேர்ந்துவிட்டது. அதாவது தாயின் காலடி சிறியதாகவும் மகளின் காலடி பெரியதாகவும் இருந்தன. இருந்தாலும் பரவாயில்லை என்று ஆண்களில் தந்தை, மகளையும், மகன் பெண்களில் தாயையும் திருமணம் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்தனர்,

காலப்போக்கில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு குழந்தை—ஆண் குழந்தைகள் என வைத்துக் கொள்வோம்—பிறந்தன.

இப்போது அக்குழந்தைகளின் உறவு என்ன? மகன் குழந்தை அப்பனின் குழந்தையை அப்பா வழியில் 'சித்தப்பா' என்றழைப்பதா? தாய் வழியில் அக்காள் மகனை, மருமகன் என்றழைப்பதா?

வேதாளம் இவ்வாறு கேட்டதும் விக்கிரமாதித்தன் விடை தெரியாமல் விழித்தானாம்.

இது அசல் விக்கிரமாதித்தன் கதை! விக்கிரமாதித்தனுக்கு விடை தெரியாமல் தோற்றுப் போனான் என்பது அவனுடைய துண்ணறிவுக்குப் பொருத்தமாகப் படவில்லை.

இந்த கதையில் முறை தெரியாமல் போக வழியே இல்லை. இந்திய நாட்டில் பெரும்பாலான சமுதாயங்கள் ஆண் வழி உரிமை யுடையவை உறவுகளெல்லாம் ஆண்களை அடிப்படையாகக் கொண்டவை. பெண்களைப் பற்றிய உறவைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இப்போதும் அந்தப் பழக்கம் தமிழ் நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகிறது.

வேளார் என்னும் குயவரில் கொங்கு 24 நாட்டுப் பெயரையும் குடிப்பெயராகக் கொண்டு 24 பிரிவாக உள்ளனர். ஒரு நாட்டைச் சேர்ந்தவர் பங்காளிகள் — அடுத்த நாட்டவருடன் தான் மண உறவு கொள்வர். அதன்படி கிழங்கு நாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் தவ்வையும், தங்கையுமாவர். அவர்களைப் பூந்துறை நாட்டு இளைஞர் ஒருவரும், தட்டைய நாட்டு இளைஞர் ஒருவரும் மணந்து கொள்கின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் காளைக்கும், கன்னிக்கும் திருமணம் செய்யலாம்; செய்யப்படுகிறது. இங்கு பெண்களின் உறவைக் கவனிப்பதில்லை. ஆண்களின் உறவுதான் உரிமையுடையது.

அதேபோல வேளாளரில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்காளிகளாகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்த கூட்டத்தைச் சேர்ந்தவர் வீட்டுப் பெண்களையே திருமணம் செய்வர்.

ஒரு கூட்டத்தைச் சேர்ந்த இருபெண்கள் அக்காள், தங்கை யாகக் கருதப்படுவர் அவர்கள் வேறு இரண்டு கூட்டத்தைச் சேர்ந்த ஆடவரை மணந்து கொள்வதாக வைத்துக் கொள்ளலாம். அந்த இரு ஆடவரும் வேறு, வேறு கூட்டத்தைச் சேர்ந்தவர்களா தலால், தங்கள் பிள்ளை, பெண்களுக்கு மணவினை நடத்த உரிமை உள்ளது. அதன்படி அக்காள் மகனும் தங்கை மகளும் திருமண உறவு கொள்வது போலாகிறது. பெண் வழியில் பார்த் தால் பிழை போலத் தோன்றும்- ஆண் வழியில் பார்த்தால் பிழை யில்லை. முறையான உறவுதான். சகோதரிகளில் அக்காளைத் தந்தையும், தங்கையை மகனும் மணந்து கொண்டுள்ளதை கோயில் பாளையம் என்ற ஊரில் காணலாம்.

அண்மையில் வந்த தேர்தல் வழக்கு ஒன்றில் அசாம் மலை யினத்தவரை மணந்து கொண்ட தமிழ்நாட்டுப் பெண் மலையின மாகவே கருதப்படுவாள் என்று மேலுயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளதை நினைவு கொள்ளலாம்.

விக்கிரமாதித்தன் கதை எழுதியவர் எப்படி நாட்டு நடப்பை மறந்து விட்டாரோ, தெரியவில்லை. மகனின் பையன், அப்பனின் பையனைச் சித்தப்பா என்றழைப்பதே முறை எனச் சொல்லியிருக்க வேண்டும்.

கொங்கு 4/1972

# சென்னிமலை

பண்டைப் புகழ் பெற்ற மலைகளுள் சென்னி மலையும் ஒன்று நற்றிணையில் (28) பாலைத் திணையில் புலவர் முதுகூத்தனார் அதன் அழகை அளவிடுகிறார்.

மணி போன்ற நீர் பாய்ந்து ஓடும் அருவி சூழ்ந்தது; பொன் வண்ண வேங்கைகள் பாய்ந்து ஓடும் அடுக்கடுக்கான மலைத் தொடர்; உயரமாக வளர்ந்து, கணுக்கள் நிறைந்த மூங்கில் மரங்கள் நிறைந்துள்ளன; மேலே பரவும் மழை மேகங்களைக் கிழிக்கின்ற சென்னிக்கோடு என்னும் பெயர் பெற்ற உயர்ந்த வளர்ந்த பெரிய மலை.

அந்த மலையின் தலைவனோ தலைவியைப் பிரிந்து சென்று விடுகிறான். தோழி என்னதான் ஆறுதல் கூறியும், கண்களையும், நெற்றியையும் கைகளால் நீவிவிட்டு அன்னை போல இனிய வார்த்தைகள் கூறியும் பயனில்லை. கள்வனைப் போல இதயங் கவர்ந்த அக் கொடியவனாகிய தலைவனின் நினைவு மாறவில்லை.

என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடிய மாதோ
மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கை தாய ஓங்குமலை அடுக்கத்து
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழை கிழிக்குஞ் சென்னிக்
கோடுயர் பிறங்கல் மலைகிழ வோனே.

திருச்செங்கோடு என்பதுபோல அக்காலத்தில் சென்னிக்கோடு என்று வழங்கியதை அறிகின்றோம்.

குறுந்தொகை 144 ஆம் பாடலிலும் சென்னிமலை குறிக்கப் படுகின்றது.

சென்னிமலையின் அழகில் மயங்கிய இன்னொரு புலவர் மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார். (செங்கோடன் என்று தற்காலத்தில் கூடப் பெயர் வைத்துக் கொள்வதைக் காணலாம்)

ஒரு தலைவி தன் தோழியரை விட்டு விலகித் தலைவனோடு சென்று விடுவதைப் பற்றிச் செவிலித் தாய் வருந்துகிறாள்.

கொம்பிடை மலர்ந்த பூக்களைப் பறிப்பாள் வெண்ணுரை பொங்கும் கடலலையில் விளையாடுவாள். தன் தோழியரை விட்டுப் பிரியாத பண்பினள்; இன்றோ தோழியர் வேறு விளையாடல்களில் ஈடுபட்டிருந்த பொது, அவள் தனியே சென்று விட்டாள். அவ் வழியோ பரல் கற்கள் மலிந்நது; அவளது பாதங்களைத் துன்புறுத் தும்.

இந்நிகழ்ச்சி நடைபெற்றது சென்னிமலை அமைந்த நாடு. மலை முகட்டில் மழையைச் சுமந்த மேகங்கள் சூழ்ந்துள்ளன, விண்வரை உயர்ந்த கருங்கல் மலைகள் சூழ்ந்த நாடு அதுவாகும்

| | | | |
|---|---|---|---|
| கழிய | காவி | குற்றம் | கடல |
| வெண்டலைப் | புணரி | யாடியும் | நன்றே |
| பிரிவி | லாய | முரிய தொன் | றயர |
| இவ்வழிப் | படுதலும் | ஒல்லாள் | அவ்வழிப் |
| பரல் பாழ் | படுப்பச் | சென்றனள் | மாதோ |
| சென்மழை | தவழும் | சென்னி | |
| விண்ணுயர் | பிறங்கல் | விளங்கு மலை | நாட்டே. |

இங்கு 'சென்னி' என்பதற்கு 'உச்சி' என்று பொருள் கொண்டு பொதுவாக உரைப்பாகும் உளர். சென்னிமலை என்ற மலையின் பெயரை வைத்துப் பொருள் கொள்ளும் போது பொருத்தமான பொருள் தருவதால், இது சென்னிமலையே சுட்டும் என உறுதி யாகச் சொல்லலாம்.

---

கொங்கு 5/73

# சொல்லாக்கம்

நுட்பச் சொற்கள் ஆக்குவது தனிக்கலை. அதற்கென சில வழி வகைகள் உண்டு.

ஒவ்வொரு மொழியிலும் பல சொற்கள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. ஒரே சொல்லுக்கு ஒவ்வொரு காலத்திலும் ஒரு பொருள் வீதம் பல பொருள் வழங்குவதுண்டு. ஒரே சொல்லுக்கு ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு பொருள் வழங்குகும். அறிவியல் பாடத்திற்கு சொல்லிற்கேற்ற மாறாத பொருள் தேவை, அதனால் ஒவ்வோரு சொல்லிற்கும் தகுந்த பொருள் அடைவு தரவேண்டும். ஒரே சொல் ஒவ்வொரு அறிவியல் பிரிவிலும் ஒரு பொருள் அடைவு கொள்ளும். ஆங்கிலத்திலும் ஒரே சொல் ஒவவொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பொருள் கொண்டிருப்பதைக் காணலாம்.

எனவே தமிழ்ச் சொல்லாக்கத்திற்குக் கீழ்க் கண்ட விதிகளைப் பின்பற்றலாம்,

1. ஆங்கில வேர்ச் சொல்லிலிருந்து வளர்ச்சி இருப்பது போல தமிழிலும் வேர் சொல்லிலிருந்து வளர்ச்சியோடு அமைத்தல் வேண்டும்.

Photo — ஒளி
Photograph—ஒளிவரை
Photography—ஒளிவரையம்
Photograher—ஒளிவரைவர்
Photo Electric Cell—ஒளிமின்கலம்
Photo Synthesis—ஒளிசேர்க்கை
Photometer — ஒளி அளவி
Photo technic — ஒளி நுட்பம்

2. ஒருசொல் அமைககும் போது அதன் தொடர்புடைய பல சொற்களைத் திரட்டி வேறுபாடு புலனாகும்படி அமைத்தல்.

Technic — நுட்பம்
Technician — நுட்பர்
Technology — நுட்பவியல்

Technologist — நுட்பவியலர்
Technocrat — நுட்பாளுநர்
Technical Terms — நுட்பச் சொற்கள்
Polytechnic — பன்னுட்பியம்
Monotechnic — ஒரே நுட்பியம்

3. ஒரு முன் இணைப்போ, பின் இணைப்போ பல இடங்களுக்குப் பொருந்துமாறு அமைத்து சீர்மை (Uniformity) க்கு முதலிடம் தரவேண்டும்.

**வேர்ச் சொற்கள்**

Geo — புவி
Bio — உயிர்
Archaeo — தொல்
Paleo — பழைய
Tele — தொலை
Micro — நுண்
Petro — பாறை

**பின் இணைப்புகள்**

Logy — இயல்
Meter — அளவி
Metry — அளவையம்
Graph — வரை
Graphy — வரையம்
Scope — நோக்கி

4. ஆங்கிலச் சொற்களை அடிப்படைச் சொற்களாக எடுத்துக் கொண்டு தமிழ்ச் சொற்களை அவற்றிற் கொப்ப அமைத்தல் நல்லது

Hydrology — நீரியல்
Hydraulics — நீரியம்
Hydrostatics = நீர்நிலையியம்
Dynamics — இயங்கியம்
Mechanics — எந்திரவியம்
Physics — இயல்பியம்
Chemistry — இயைபியம்
Polytechnic — பன்னுட்பியம்

குறிப்பு :- இயல் என்ற சொல் அறிவியல் பாடப் பகுதியைக் குறிக்கும் சொல்லாக இருந்த போதிலும் ஆங்கிலத்தில் logy என்று முடியாத இடத்தில் இயல் என்று முடியாதவாறு அமைத்தால் குழப்பம் குறையும்.

5. கிட்டத்தட்ட ஒரு பொருளுடைய பல சொற்களுக்கு இணையாக சொற்களைத் தேடி இடுகுறியாக நிர்ணயிக்க வேண்டும்.

| | |
|---|---|
| Board | வாரியம் |
| Council | மன்றம் |
| Committee | ஆயம் |
| Commisson | ஆணைக்குழு, ஆணையம் |
| Corporation | பேராயம் |
| Society | சங்கம் |
| Federation | கூட்டணி |
| Confederation | பெருங்கூட்டணி |
| Institute | சழகம் |
| Establishment | நிறுவனம் |

6. ஒரு அறிவியல் பாடத்தை எடுத்துக் கொண்டால் அதில் வரும் சொற்களை ஒன்று திரட்டி. அவைகளுக்கேற்ப முறைப்படுத்தி அமைத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| Load | எடை |
| Live load | நகர் எடை |
| Dead load | நகார எடை |
| Distributed load | பரவு எடை |
| Uniformiy Distributed load | சீர் பரவு எடை |
| Load due to impact | உதைய எடை |
| moving load | இயங்கும் எடை |

7. பெயர்ச் சொற்களை (Proper-Nouns அப்படியே எடுத்துப் பெயர்த்து எழுதலாம்.

எழுத்துப் பெயர்த்து எழுதும் போது தமிழ் முறைக்கு ஏற்ப சிறிதளவு மாற்றம் செய்து கொள்ளலாம். ஆனால் தமிழில் எழுதிய

பின் படித்தால் ஆங்கில மூல உருவம் புலனாக வேண்டும். மூல உருவம் புலனாகத அளவு உருமாற்றம் செய்தால் நன்மை தராது.

Toriselli — டாரி செல்லி
Diesel — டீசல்
Volt — ஓல்ட்டு
Amphere — ஆம்பியர்

தற்போது மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்று தருவதால் ஆங்கிலம் அறியாத தமிழர் இனி இரார். எனவே மூலச் சொல்லை ஒரு தடவை ஆங்கிலத்தில் தெரிந்து கொண்டால். தமிழில் எழுதிய சொற்களையே ஆங்கில உச்சரிப்போடு படிக்கும் பழக்கமே இருக்கும்.

8. நல்ல சொல் கிடைக்காதவரை ஆங்கிலச் சொற்களை அடைப்புக்குறிக்குள் ஆங்கில எழுத்தோடு அப்படியே கையாளலாம்.

9. இயன்றவரை வடமொழிச் சொற்களை பயன்படுத்தாமை வேண்டும்.

கட்டுரை எழுதுமுன் சொற்களை கண்டுபிடிக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. எழுத, எழுத நல்ல சொற்கள் பிறக்கும். பழகப் பழகச் செப்பமுறும். ஏராளமாக எழுத வேண்டும். அப்போதுதான் நல்ல சொற்களைத் தேர்ந்தெடுக்கமுடியும். தொடக்கத்திலேயெ சொற்களை நிலைவு (Standardise) செய்ய வேண்டியதில்லை. பல சொற்கள் பிறக்க வழிவிட்டு நல்லதைத் தேர்ந்தெடுக்கலாம்.

---

19-2-71 அன்று கிண்டி, பொறியிற் கல்லூரித் தமிழ் மன்றம் நடத்திய அறிவியலை நோக்கி கருத்தரங்கில் வாசித்த எழுத்துரையின் சுருக்கம்.

கொங்கு 5/1973

# அடையாறு ஈமப்பேழை

காந்தியடிகள் நினைவாலயத்திற்கு எதிரில் அமைந்துள்ளது அழகப்பர் தொழில்நுட்பக் கல்லூரி. அந்த வளாகத்தில் ஒரு நூலகம் அமைப்பதற்காக அடித்தள வாணம் பரிக்கையில், சில தொன்மைச் சின்னங்கள் கிடைத்தன. அவற்றின் விவரம் தருவது இக்கட்டுரை.

B 8, B 10 ஆகிய இரண்டு குழிகளிலும் இரண்டு ஈமப் பேழைகளின் பகுதிகள் கிடைத்தன. பண்டைக் காலத்தில் இறந்தோரை அடக்கம் செய்வதற்காக களிமண்ணில் செய்யப்பட்ட பேழை. ஏதாவது ஒரு மிருகத்தின் வடிவில் செய்யப்பட்டிருக்கும். வயிற்றுப் பகுதி அடிப்பகுதியும் அதற்குமேல் மூடி போன்றும் இரண்டு பகுதியாகச் செய்யப்பட்டிருக்கும். கழுத்தில் தலைப் பகுதி தனியாகச் சொருகும் வகையில் அமைந்திருக்கும், வயிற்றுப் பகுதியிலிருந்து 10 அல்லது 12 கால்கள் இருக்கும்.

இறந்தவர்களை ஈமப்பேழையின் வயிற்றுப் பகுதியில் வைத்து, கூட ஒரு சில பொருள்களை வைத்து மூடி, இடுகாட்டில் தரை மீது வைத்து விடுவர்,


தற்போது கிடைத்தவை. சுமார் இரண்டடி ஆழத்தில் இருந்தன. மண் அழுத்தத்தால் அமுங்கிப் போய் இருந்தன. ஒன்று சுமார் 170 செ மீ நிளம் இருந்தது. கால் நின்ற பகுதி சல்லிமண்ணாலான கெட்டிப் பகுதி.மேல் பகுதி களிமண்ணால் ஆன பகுதி. இதிலிருந்தே ஈமப்பேழை புதைக்கப்படாமல் தரை மேல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததென்று அறிகின்றோம். கால்கள் சுமார் 10 செ. மீ. விட்டம் கொண்டவை. ஈமப்பேழையின் ஓடுகள், உமிகலந்த மண்ணால் செய்யப்பட்டுச் சுடப்பட்டவை. சுமார் 2 செமீ, கனமான ஓடுகளாகக் கிடைத்தன, கால்கள் ஒன்றுக் கொன்று இடைவெளி சுமார் 30 செ. மி. இருந்தது.

குழிஎண் B 10 : இந்தக் குழியில் இருந்த ஈமப்பேழை கிழக்கு மேற்காக இருந்தது, தலைமாடு கிழக்குப் பக்கம் இருந்தது. பொடித்து நைந்து போயிருந்த எலும்புத் துண்டுகள் இருந்தன. இத்துடன் அடியில் கூராகவும் மேலே வாய் அகலமாகவும் உள்ள, ஒரு மண்



1 2 3

1, 2. பேழையின் கால்கள் 3 திருவையில் செய்த ஓடு




1 2 3 4


1 ஈமப்பேழையின் வாய்ப்பாடு 2 & 3 மூடி 4 கழுத்து



1 2 3 4 5

1 எலும்புத்தூள் 2 கலையோட்டின் பகுதி 3 விலங்கு எலும்புத் தொல்படிவு (Fossil)
4 ஓடு 5 கொப்பரையின் அடிப்பாகம்





கலையோடு


RING STAND

BLACK WARE

கொப்பரை

BOWL

BLACK & RED WARE



GRAFITI FOUND ON A RING STAND

கலையோட்டின் மீதுள்ள எழுத்துகள்

ஏனமும் (கொப்பரை) அதைத் தாங்குவதற்காக ஒரு கலையோடும் இருந்தன. மேலும் சில சிறு ஏனங்களின் ஓடுகளும் இருந்தன. கலையோடு முழுவதும் கருப்பு வண்ணத்தில் இருந்தது. கொப் பரையின் உட்பக்கம் கருப்பாகவும் வெளிப்பக்கம் சிகப்பாகவும் இருந்தது. இவ்வகை கருப்பு-சிகப்பு ஓட்டிலிருந்து இதன் காலத்தை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கணக்கிடலாம்.

**குழிஎண் B 8 :** இந்தக் குழியில் இருந்த. ஈமப்பேழை வட கிழக்கு தென்கிழக்கு திசையில் இருந்தது. வடகிழக்குப் பக்கம் தலைமாடு இருந்தது. இதிலும் எலும்புத் தூள் இருந்தது. ஒரு கருப்பு வண்ணக் கலையோடும், கருப்பு-சிகப்பு வண்ணக் கொப்பரையும், மேலும் சில் சிறிய ஓடுகளும் இருந்தன. கலை ஓட்டின் துண்டுகளும் கொப்பரையின் துண்டுகளும் ஒட்டப்பட்டு, அழகப்பர் தொழில் நுட்பக் கல்லூரியின் நூலகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப் பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்கள் சென்று காணலாம். கலை யோட்டின் விளிம்பு ஓரத்தில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. எனினும் அதன் மொழி புரியவில்லை. (படம் காண்க)

பிற குழிகளில் தோண்டிய மண்ணில் வேறு சில ஓட்டுத் துண்டுகள் கிடைத்தன. ஒரு பெரிய எலும்புத் துண்டின் தொல் படிவம் (Fossil) கிடைத்தது.

**கணிப்பு :** பெரியோர்களை அடக்கம் செய்யும் முறைகளில் ஈமப் பேழையில் அடக்கம் செய்யும் முறையும் ஒன்று என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலமாகவும் மணிமேகலை மூலமாகவும் அறிகின்றோம், சென்னை நகரத்திலும். அதன் சுற்று வட்டாரத் திலும் ஈமப்பேழைகளும், ஈமத்தாழிகளும் வேறு பல புதை முறை களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அடையாற்றின் கரையோரம் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். அடை யாற்றங்கரை நாகரீகம் பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய தென்பதை உணரலாம்.

# பொட்டுச் சூடு

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன் செயலெழுதித் தீர்த்த முகம் திங்களோ காணீர் என்று கோவலன் மாதவியைக் கண்டு வியக்கிறான். கயலான கண்களுக்கும் வில்லான புருவங்களுக்கும் காரான கூந்தலுக்கும் இடைப்பட்ட பிரதேசம் ஒன்றுண்டு. அதுவே நெற்றி ஆகும்.

கொங்கு நாட்டுப் பெண்கள் பலரின் நெற்றியில் ஒரு தனிச் சிறப்பு தென்படும். அது ஒரு தழும்பாகும் அது வட்டமான ஒரு புள்ளியாக இருக்கலாம். அல்லது செங்குத்தான ஒரு நேர் கோடாக இருக்கலாம். இரண்டு புருவங்களுக்கு நடுவில் அந்தப் புள்ளி அமைந்திருக்கும் பச்சை குத்திக் கொள்வதும் உண்டு.

நெற்றிக்குப் பொட்டிட்டுக் கொள்வது மங்களத்தின் அறிகுறி. கண்ணாடியைப் பார்த்துந்தான் பொட்டிட்டுக் கொள்வர். இருந்தாலும் பல பெண்களுக்கு பொட்டு கோணலாகப் போய்விடும். இவ்வாறு கோணலாகாமல் வழிகாட்டியாக அமைவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதே அந்தப் புள்ளியாகும். சாந்துப்பொட்டை நேராக இடுவதற்காக நீளக்கோடு வைக்கப்படுகிறது.

இது எவ்வாறு வைக்கப்படுகின்றது? நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய மைகோதியில் நெற்றியிலே சூடு வைக்கிறார்கள். இளமையிலேயே. இரண்டு அல்லது மூன்று வயதிலேயே இதை வைத்து விடுகின்றனர். இது என்ன கொடுமை என்கிறீர்களா? தன் பெண்ணின் அழகு கருதி தாய்மார் குழந்தைகளுக்கு இடும் சூடு இதுவாகும். இந்த வழக்கம் இன்னும் பல கிராமங்களில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. (இளம் வயதில் வலிப்பு நோய் வந்தால், அதற்கு மருந்தாகப் பொட்டுச் சூடு வைப்பது வழக்கம் என்றும் கூறுவர். விரலி மஞ்சளைச் சுட்டு, நெற்றி நரம்பு பார்த்து, அந்த இடத்தில் வைத்தால் வலிப்பு நோய் மீண்டும் வராது என்பர்)

சில பெண்களுக்கு சூடு வைப்பதற்குப் பதிலாகப் பச்சை குத்தி விடுகிறார்கள். பொட்டாகவோ நேர்கோடாகவோ இருப்பதைக் காணலாம்.

மீண்டும் நினைவு படுத்துகிறோம். இந்த ஏற்பாடு பெண்கள் பொட்டு, திலகம் அழகாக நேராக இருப்பதற்காக, ஆனால் ஆண்ட

வன் பல வேளைகளில் அந்தப் பெண்கள் நெற்றியிலே திலகத்தை அதிக நாள் இட முடியாமல் சோதித்து விடுகிறான். ஆம், மங்க ளத்தை எடுத்து வெள்ளாடை தந்து விடுகிறான். கணவனை இழந்த காரிகையாக, வெற்று நெற்றியராக இருப்பதைக் காண நேரிடுகின்றது. வெள்ளாடை உடுத்தி கைமை நோன்பு காக்கும் பெண்களின் நெற்றியில் இந்தப் பொட்டுச் சூட்டைக் காணும் போது, அன்று பழுத்துக் காய்ச்சிய மைகோதியை நெற்றியில் சுட்ட போது அந்தச் சின்னஞ்சிறிய சிசுவுக்கு ஏற்பட்டதை விட கடுமை யான வலி நமது நெஞ்சில் தோன்றுகின்றது.

கொங்கு 11/76

---

# கிண்டியில் பண்டைத் தாழி

கிண்டியிலுள்ள. கிங் நிலையத்தில் மின்னேற்றிக் கூடத்தின் அடித்தளம் தோண்டும் போது ஒரு ஈமத் தாழி கிடைத்தது, தாழிஒடு சுட்ட மண்ணாலானது. 1 செ. மீ. கனம் உள்ளது. தாழியின் வெளிப்புறம் வழவழப்பாகவும் உள்ளது. அதனுடன் மெல்லிய கருப்பு சிகப்பு ஒட்டுச் சில்லுகள் இரண்டு கிடைத்தன. ஓடுகள் நில மட்டத்திலிருந்து 70 செ. மீ. ஆழத்தில் கிடைத்தது; ஓடைக்கல் மேலே அமைந்திருந்தது.

கருப்பு-சிகப்பு ஓட்டுச் சில்லுகளின் அமைப்பைக் கொண்டு இதன் காலம் கி, பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தனியாகக் கருதும்போது இக்கண்டுபிடிப்பு பெரிய செய்தி அல்ல. ஆனால் மூன்றாண்டுகளுக்கு முன் அடையாறு நுட்பவியல் கல்லூரியில் கிடைத்த ஈமப்பேழைகளோடு ஒப்பிடுகையில், இது ஒரு முக்கியமான செய்தி ஆகின்றது. அடையாற்றின் தென்கரையில் சங்க காலம் தொட்டு மக்கள் தொடர்ந்து வசித்து வந்துள்ள உண்மை தெளிவாகின்றது.


புதையுண்ட பண்டை நகரம் ஒன்று சென்னை மாநகருக்குள் ளேயே மறைந்து கிடக்கின்றது. பொருளாதார முன்னேற்றத்தால் ஏற்படும் வளர்ச்சிப் பணிகளின் போது விழிப் போடிராவிட்டால் பண்டை நகரத்தின் எச்சங்கள் விரைவில் அழிந்து போகும்.

கொங்கு 5/73

# அடையாறு பீரங்கி

1746 ஆம் ஆண்டு நடந்த அடையாற்றுப் போர் புகழ் பெற்றது சென்னை மாநகரை பிரெஞ்சுக்கார்ர் பிடித்துக் கொண்ட போது அதை ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கும்படி, ஆர்க்காடு நவாபு ஆணையிட்டார். பிரஞ்சுக்காரர் அடிபணியவில்லை, அதனால் போர்ப் படையை அனுப்பினார் நாவபு. இரண்டு தரப்பிலும் பீரங்கிகளும், வெடி மருத்துகளும் பயன் கடுத்தப்பட்டன.

அப்போரில் பயன்பட்டிருக்கலாம் என்று ஐறயுத்தக்க இரும்பு பீரங்கி ஒன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. பலகை வாராவதிக் கருகில், தரமணி கிராமத்தில் புதிதாகக் வளர்ந்து வரும் அடிப்படை மருத்துவ அறிவியல் கழகக் கட்டிடத்திற்கான அடித்தளம் தோண்டும் போது கிடைத்தது. ஒன்பதடி நீளமும் ஒன்றரை அடி அகலமும், உள்ளது. துளைவிட்டம் அரை அடி, இரண்டு டன் எடை இருக்கலாம் பார்க்க விரும்புவோர் சென்று பார்க்கலாம்.



அடையாறு பீரங்கி

# ஓலைச்சுவடிகள்

கரூர் வட்டம், கொக்கம்பட்டி கிராமத்திலிருந்து நான்கு ஓலைச் சுவடிகள் வாங்கி வந்து, தமிழக அரசின் சுவடிக் காப்பகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிய குறிப்புகள் வருமாறு :-

சுவடி 1 : அரிச்சந்திர புராணம் நாடக வடிவில் எழுதப் பெற்றது. எளிய நடையுடையது முற்றுப் பெறவில்லை.

சுவடி 2 : பாரதக் கதையின் ஒரு பகுதியாகிய சுந்தரி (திரோபதி) யின் திருமணச் செய்தியைச் ''சுந்தரி அம்மானை'' என்ற தலைப்பில் எழுதப் பெற்றுள்ள சுவடி. எளிய யான நடையிலேயே அமைந்துள்ளது. முற்றும் உள்ளது. பரிதாபி ஆண்டு கொக்கம் பட்டியைச் சேர்ந்தவரால் படி எடுக்கப் பட்டுள்ளதாக எழுதப் பட்டுள்ளது.

சுவடி 3 : விநாயர் அகவல், ஆத்திச்சூடி, உலகநீதி ஆகியன எழுதப் பெற்ற சுவடியாகும்.

''குழிமாற்று'' என்ற தலைப்பில் தமிழ் எண்கள் எழுதப் பெற்ற பகுதியும் அடங்கியுள்ளது, தமிழக நில அளவையில் குழியும் ஒரளவு ஆரும். குறியின் மேல் வாய் கீழ்வாய் இலக்கங்களாக இருக்கலாம். என்று கருதப் படுகிறது. சுவடிக் காப்பகத் தலைவர் அவர்களின் ஆய்வில் உள்ளது. விரைவில் வெளியிடுவதாக உறுதி அளித்துள்ளார்கள்.

வடி 4 : ''கோள் நிலை ஆருடம்'' என்ற பெயரில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் ... போன்ற கோள்களின் தோற்ற திசை, சஞ்சரிக்கும் திசை விவரங்கள். அவற்றின் பலன்கள் போலவை வற்றை விளங்கு கின்றன.

சுவடிக்காப்பகம் (Oriantal Manuscirpt library) இவற்றை வெளியிடுமென்று எதிர்பார்ப்போமாக-

........................................

கொங்கு 6/.72

# தேனோலை

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 11-பி, இரண்டாவது அவின்யு<br>இந்திரா நகர், சென்னை-600020. |
| காலமுறை | : | காலாண்டு |
| அச்சிடுவோர் பெயர் | : | நாரா. நாச்சியப்பன்<br>இந்தியர்<br>ஜானி ஜான்கான் சாலை<br>இராயப்பேட்டை, சென்னை-600014. |
| வெளியிடுவோர் பெயர் | : | ச. பிரகதம்<br>இந்தியர்<br>11-பி, இரண்டாவது அவின்யு<br>இந்திரா நகர், சென்னை-600020. |
| ஆசிரியர் பெயர் | : | ச. பிரகதம்<br>11-பி, இரண்டாவது அவின்யு<br>இந்திரா நகர், சென்னை-600020 |
| உரிமையாளர் | : | ச. பிரகதம்<br>: 11-பி, இரண்டாவது அவின்யு<br>இந்திரா நகர், சென்னை-600020. |

ச. பிரகதம் ஆகிய நான், மேலே கண்ட விவரங்கள் அனைத்தும் நானறிந்து நம்புகிறபடி உண்மையென அறிவிக்கின்றேன்.

1—4—1981 ச. பிரகதம்

All kinds of tyres from Scooter to Tractor tyres are retreaded most scientifically in our Modern Plant

For Quicker and Dependable Retreading

*Contact :*

**THE ANAMALLAIS RETREADING CORPORATION**

104, MOUNT ROAD – GUINDY

MADRAS – 600 032

Dial : 433286, 433287, 433288

ஆசிரியர், வெளியிடுபவர் : கொடுமுடி சண்முகப் பிரகதம்,
11-ஆ இரண்டாம் பெருஞ்சாலை, இந்திரா நகர்,
சென்னை-600 020

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600 014.